திண்டுக்கல் மாவட்டம் - கொடைக்கானலில் விளம்பரப் பலகை காற்றினால் சாய்ந்த விபத்தில்

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 28 -

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் பேருந்து நிலையம் அருகே விளம்பரப் பலகை பொருத்தப்பட்ட சிக்னல் போஸ்ட் காற்றினால் சாய்ந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவியும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கொடைக்கானல் நகரம், கொடைக்கானல் பேருந்து நிலையம் அருகே உள்ள விளம்பரப் பலகை பொருத்தப்பட்ட சிக்னல் போஸ்ட் நேற்று (26.06.2024) காலை 9.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக பலத்த காற்றினால் சாய்ந்த விபத்தில் அப்பகுதியில் தள்ளுவண்டியில் இலைகளை ஏற்றி சென்றுகொண்டிருந்த கொடைக்கானல் தெரசா நகரைச் சேர்ந்த திரு. அந்தோணிதாஸ் (வயது 55) த/பெ. எட்வர்ட் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# சட்டப்பேரவையில் அமைச்சர் மதிவேந்தன் பதிலுரை... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

6. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையில் இரவு வானத்தின் உள்ளார்ந்த வனப்பை இயற்கை கலாச்சார மற்றும் வரலாற்று வளமாக அங்கீகரிக்கும் வகையில், ரூ.1.00 கோடி செலவில் இரவு வான் பூங்கா அமைக்கப்படும். பாதுகாக்கப்பட்ட பகுதியில் இயற்கை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக இயற்கை இருளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது. இத்தகைய இரவுப் பூங்காக்கள் உலகளாவிய அளவில் கணிசமான ஆபத்தை விளைவிக்கும் ஒளி மாசுபாட்டின் உலகளாவிய அச்சுறுத்தலில் இருந்து விலைமதிப்பற்ற இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவும். இது இரவுநேர விலங்கு களுக்கு இணக்கமான ஒரு பூங்காவாக இருக்கும். இது மின்சார விளக்குகளின் பயன்பாட்டைக் குறைத்து இரவு வானத்தில் நட்சத்திரங்களைப் பார்ப்பதை அதிகரிக்கிறது. இது இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இரவு வான் பூங்காவாக அமையும்.

7. தமிழ்நாட்டின் கடற்கரைக்கு ஆண்டுதோறும் ஆலிவ் ரிட்லி (சிற்றாமை) ஆமைகள் மற்றும் பச்சை ஆமைகள் வருகை தருகின்றன. ஆமைகளை பாதுகாக்கும் நோக்கில், உள்ளூர் மீனவ தன்னார்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களை உள்ளடக்கிய ஆமை பாதுகாவலர் குழுக்கள் ஆமைகள் முட்டையிடும் பகுதிகளை பாதுகாப்பதற்கும், ஆமை குஞ்சுகளை மீண்டும் கடலுக்குள் பாதுகாப்பாக அனுப்ப உதவும் பணிகளிலும் ஈடுபடுத்தப்படும். வருடத்திற்கு 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

8. தஞ்சாவூர் வனக் கோட்டத்திற்கு உட்பட்ட கும்ப கோணம் வனச்சரக எல்லைக்குள் உள்ள அணைக்கரைப் பகுதி தமிழ்நாட்டில் உள்ள சதுப்பு முதலைகளின் (Crocodylus palustris) முக்கியமான வாழ்விடமாக உள்ளது. உள்ளூர் சமூகங்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முதலைகளின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், மனிதமுதலை முரண்களை தடுக்கும் வண்ணம் முதலை இனத்தினை பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் வகையிலும், அணைக்கரையில் முதலைகள் பாதுகாப்பு மையம் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

9. ஆர்க்கிடேரியம் என்பது மரங்களில் தொற்றி வளரும் பல்வேறு அழகான பூக்கும் தாவரங்களைக் கொண்ட தொகுப்புகளை வளர்ப்பதற்கும், காட்சிப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்பு வசதியாகும். ஆர்க்கிடேரியங்கள் ஏற்கெனவே ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் கூடலூரில் நிறுவப்பட்டுள்ளன. பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் தேவைக்காகவும், உள்ளூர் சமூகத்திற்கு ஆர்க்கிட் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை புரிய வைக்கவும் கூடலூர் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆர்க்கிடேரியங்கள் நவீன வசதிகளுடன் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

10. தமிழ்நாட்டின் வனப் பகுதிகளில் உள்ள 40 மலையேற்ற வழித்தடங்களை தமிழ்நாடு அரசு கண்டறிந்துள்ளது. அந்த மலையேற்ற வழித்தடங்களுக்கான வரைபட புத்தகங்கள் உருவாக்கப்படுவதுடன், அத்தடங்களில் தேவையான அடிப்படை வசதிகள் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

### டாக்டர் ஏ.ஜே.டி.ஜான்சிங் வன உயிரின பாதுகாப்பு விருது - ரூ.25 இலட்சம்!

A Trekking Atlas with 40 trekking routes in Tamil Nadu will be prepared and basic infrastructure facilities will be developed in all identified routes at a cost of Rs.4.00 crore.

சாலைகளைப் பற்றியும், யானை வழித்தடங்களைப் பற்றியும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அதில், மிக முக்கியமாக, மாஞ்சோலை தோட்ட விவகாரம் பற்றி வெட்டுத் தீர்மானங்க ளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுகுறித்த வழக்குகள் தற்போது மாண்பமை நீதிமன்றத்தில் இருப்பதால், வனத் துறையின் களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் அமைந்துள்ள மாஞ்சோலை தோட்டப் பகுதியானது, தமிழ்நாடு அரசு Bombay for Mar Trading Corporation என்ற நிறுவனத்திற்கு குத்தகை விடப்பட்ட பகுதியாகும். குத்தகைக் காலம் முடிவடையும் நிலையில், அங்கு பணி செய்யும் தொழிலாளர்களின் மறுவாழ்வு உதவிகள் குறித்த கோரிக்கைகள் உள்ளன. இதுகுறித்த வழக்கு மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ளது. உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்பேரில், அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத் துறையின் மானியக் கோரிக்கையை தயார் செய்ய எனக்கு பேருதவியாக இருந்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, I.A.S. அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், முதலமைச்சரின் செயலாளர்கள் மரியாதைக்குரிய நா. முருகானந்தம், I.A.S. அவர்களுக்கும், Dr. P. உமாநாத், I.A.S. அவர்களுக்கும், M.S. சண்முகம், I.A.S. அவர்களுக்கும், திருமதி. அனு ஜார்ஜ், I.A.S. அவர்களுக்கும், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், I.A.S. அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர் ஆர். தினேஷ்குமார் அவர்களுக்கும், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா ஸாஹு, I.A.S. அவர்க ளுக்கும்,

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத் துறைத் தலைவர் சுதான்ஷு குப்தா, I.F.S., அவர்களுக்கும், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, I.F.S., அவர்களுக்கும், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் முனைவர் வீ. நாகநாதன், I.F.S., அவர்களுக்கும் மற்றும் வனத் துறை உயர் அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்த வரையில், வனத்துறையின் இந்த மானியக் கோரிக்கையின் மீது 47 உறுப்பினர் அவர்கள், 119 வெட்டுத் தீர்மானங்களை வழங்கியுள்ளனர். இவற்றில் பெரும்பாலான உறுப்பினர்கள் வனப்பகுதிகளில் உள்ள, வன உரிமை சட்டம், சாலை வசதி, மரகத பூஞ்சோலை, வனத் தீயை கட்டுப்படுத்துதல், அந்நிய களைச்செடிகளை அகற்றுதல், பசுமை தமிழக திட்ட செயல்பாடுகள்போன்றதீர்மானங்களைத் தந்துள்ளார்கள். இவைகளுக்கு எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பி லும், என்னுடைய பதிலுரையிலும் விளக்கம் தந்துள்ளேன் என நம்புகிறேன். மேலும், அலுவலகக் குடியிருப்புகள், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளைத் தந்துள்ளனர். இந்தக் கோரிக்கைகளின் மீது தனிக்கவனம் செலுத்தி நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுப்பினர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்ப பெற்றுகொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் பதிலுரை வழங்கினார்.

# என் மீது நம்பிக்கை வைத்த மக்களுக்கு நன்றி!

## ராகுல் காந்தி காணொலி பதிவு!



சென்னை, ஜூன் 28-

என் மீது நம்பிக்கை வைத்த மக்களுக்கு நன்றி என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு காங்கிரஸ் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ராகுல் காந்தி தன்னுடைய எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள காணொலி பதிவில், "என் மீது நம்பிக்கை வைத்த நாட்டு மக்களுக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும், இந்திய சகோதரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

எதிர்க்கட்சித் தலைவர் என்பது வெறும் பதவி மட்டுமல்ல. உங்கள் குரலாக மாறி உங்கள் நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடுவது மிகப்பெரிய பொறுப்பாகும்.

ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் மிகப்பெரிய ஆயுதம் நமது அரசியலமைப்புச் சட்டம், அதன் மீதான ஒவ்வொரு தாக்குதலுக்கும் முழு பலத்துடன் பதிலடி கொடுத்து அதைப் பாதுகாப்போம். நான் உங்களுடையவன், உங்களுக்காக மட்டுமே..!" எனக் குறிப்பிட்டுள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்டம் சுரண்டை ஆர்.சி.நடுநிலைப் பள்ளியின் கோரிக்கையை ஏற்று தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ரூபாய் 40 ஆயிரம் மதிப்பில் மடிக்கணினியை வழங்கினார். உடன் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளனர்.

10.5% இடஒதுக்கீடு: அ.தி.மு.க. ஆட்சியில் அவசர கதியில் நிறைவேற்றம்! உண்மையில் அது கிடைக்க வேண்டுமானால்

# மக்கள் தொகை - சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்திதான் கொண்டு வர முடியும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கம்!

சென்னை, ஜூன் 28-

சட்டப் பேரவையில் 24.6.2024 அன்று உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித்துறை மானியத்தின் போது, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலளிக்கையில், "வன்னியர் சமுதாயத்திற்கான 10.5% இட ஒதுக்கீடு, அ.தி.மு.க. ஆட்சியில் அவசர கதியிலே நிறைவேற்றப்பட்டது என்றும், உண்மையில் அம்மக்களுக்கு அது கிடைக்க வேண்டுமானால், மக்கள் தொகை கணக்கெடுப்பை, சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்திதான் கொண்டு வர முடியும்" என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் பென்னாகரம் பா.ம.க. உறுப்பினர் ஜி.கே.மணி பேசுகையில், குறுக்கிட்டு பேசிய சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டதாவது:-

உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் வன்னியர் சமுதாயத்திற்காக 10.5 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டும் என்பதை வலியுறுத்தி இங்கே பேசினார்கள்.

கடந்த ஆட்சியிலே அந்த 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது. ஆனால் உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் இரண்டுமே அந்த உள் ஒதுக்கீட்டை இரத்து செய்துவிட்டது. காரணம், சரியான தரவுகளுடைய அடிப்படையிலே கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, பொருளாதாரத்தினுடைய பிரச்சினைகள் இவற்றைப் பற்றிய சரியான தரவுகளோடு கொண்டுவராமல் இந்தத் திட்டத்தை அவசர கதியிலே நிறைவேற்றிய காரணத்தினாலேதான் அது இன்றைக்கு இரத்து செய்யப்பட்டிருக்கிறது உயர்நீதிமன்றத்தாலும், உச்சநீதிமன்றத்தாலும்.



### ஒன்றிய அரசுக்கு முதல்வர் கோரிக்கை!

எனவே, இந்தக் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு போன்ற தரவுகள் இன்றைக்கு கொண்டுவரப்பட வேண்டும். அதற்காக நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு இந்தப் பரிந்துரைகளை எல்லாம் ஆராய்ந்து அறிக்கை அளித்திட நம்முடைய ஓய்வுபெற்ற நீதியரசர் பாரதிதாசன் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு கூடுதல் Terms of Reference அது அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையிலே இந்த ஆணையம் விரைவான ஆய்வுகளைத் தர வேண்டுமென்பதற்காக அரசாங்கமே கல்வி, வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கான தரவுகளை இன்றைக்கு அரசாங்கம் திரட்டி தந்திருக்கிறது. ஆனால், சமூகம், பொருளாதார மேம்பாடு போன்ற தரவுகள் திரட்டித் தரப்பட வேண்டுமென்று சொன்னால் அங்கே மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எடுத்தாக வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பு எடுத்தாக வேண்டும். இதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசிற்கு சாதிவாரிக் கணக்கெடுப்பை 2001க்குப் பிறகு நடத்தப்படவில்லை. எனவே, சாதிவாரிக் கணக்கெடுப்பை நீங்கள் நடத்துங்கள் என்கின்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள்.

மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன், சாதிவாரிக் கணக்கெடுப்பையும் நடத்தினால்தான், சமூக பொருளாதார மேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பை அரசு திரட்டித் தந்தாலும், அந்த சமுதாயத்தின் பொருளாதார மேம்பாடு மற்றும் அவர்களின் பொருளாதாரம் பற்றிய தரவுகள் இவற்றை நாம் சாதிவாரிக் கணக்கெடுப்பு மூலமாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மூலமாகத்தான் கொண்டுவர முடியும். எனவேதான் நாங்கள் இதை வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இன்றைக்கு நீங்களும் ஒன்றிய அரசின் கூட்டணியில் இருக்கின்றீர்கள். எங்கள் கோரிக்கையை நீங்களும் வலியுறுத்தி, மிக விரைவிலேயே சாதிவாரிக் கணக்கெடுப்பினை நடத்த வைத்து, அதன் பிறகு இந்த இட ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அரசு அதற்கு எந்தவகையிலும் தடையாக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

### பீகாரில் ரத்து செய்யப்பட்டுள்ளது!

அப்போது முதல்வர் அவர்கள் கூறுகையில், இப்போது நீங்கள் எந்தக் கூட்டணியில் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தக் கூட்டணிக் கட்சியோடு பேசி, நாடு முழுவதும் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி, அதன்பிறகுதான், இதை அமல்படுத்த முடியும். ஏற்கெனவே பீகார் மாநிலத்தில் இது போன்று கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அது நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

### பெயரளவில் கொண்டு வருவதில் என்ன நன்மை?

தொடர்ந்து பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, பீகார் மாநிலத்தில் இவ்வாறு சாதி வாரிக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு அது உயர் நீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனவே, அதை மீண்டும் நாம் செய்தாலும், மீண்டும் உயர் நீதி மன்றத்தால் ரத்து தான் செய்யப்படும். அவ்வாறு ரத்து செய்யப்படுவதில் உங்களுக்கு என்ன நன்மை இருக்கிறது? எனவே மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இதனை மேற்கொண்டால், யாருக்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. பெயரளவில் கொண்டுவருவதில் என்ன நன்மை இருக்கிறது? உண்மையிலேயே அது கிடைக்க வேண்டுமென்கின்ற உணர்வோடு கொண்டுவர வேண்டுமானால், மக்கள் தொகைக் கணக்கெடுப்பை சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்திதான் கொண்டுவர முடியும். ஏனென்றால், நீதிமன்றத் தீர்ப்புகள் அப்படித்தான் இருக்கின்றன. உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் அவ்வாறுதான் வழங்கியிருக்கின்றன. இதனை பீகார் மாநிலம் செய்த போது, அந்த உயர் நீதிமன்றம் அதனை ரத்துசெய்து விட்டது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர்

# பொன்குமார் பிறந்தநாள் நிகழ்ச்சி - கருத்தரங்கம்!

## சென்னை - சர்பிட்டி தியாகராயர் அரங்கில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, ஜூன் 28-

இன்று (28ஆம் தேதி) சர்பிட்டி தியாயராயர் அரங்கில் விவசாய - தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் பிறந்தநாள் நிகழ்ச்சி. நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளும் - தொழிலாளர் நிலையும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடை பெறுகிறது.

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் தலைவரும் கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான பொன்குமார் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி இன்று (28ஆம் தேதி - வெள்ளிக்கிழமை) தி.நகர், சர்பிட்டி தியாகராய அரங்கு தி.நகரில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதும் இருந்து கட்சியின் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் தலைவர் பொன்குமார் அவர்களின் பிறந்தநாளை கட்டுமானத் தொழிலாளர்கள் தினமாக கொண்டாடுவது வழக்கம். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு ஜூன் 28ஆம் தேதி கட்டுமானத் தொழிலாளர்கள் தினத்தை, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலும் தொழிலாளர்களின் நிலையும் என்ற தலைப்பில் கருத்தரங்க நடைபெற உள்ளது.

கடந்த பத்தாண்டு கால பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு ஆதரவான 40க்கும் மேற்பட்ட சட்டங்கள் நான்கு கோடுகளாக மாற்றப்பட்டு முதலாளிகளுக்கு ஆதரவான குறிப்பாக, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான நிலையை பாரதிய ஜனதா கட்சி கையாண்டது. இந்த முறை மீண்டும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்றாலும் கூட்டணி கட்சிகளின் தயவில் ஆட்சி நடத்த வேண்டிய நிலைக்கு மோடி தள்ளப்பட்டுள்ளார். எதிர்க்கட்சிகள் வலுவான நிலையில் உள்ளதால் மோடி அரசால் தான்தோன்றித்தன மாக எந்த சட்டங்களையும் கொண்டு வந்து நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த நிலையில் தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்து கருத்தரங்கு நடைபெற உள்ளது. இந்த கருத்தரங்கில் பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டு தங்கள் உரைகளை நிகழ்த்த உள்ளனர். இந்த நிகழ்ச்சிக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் என்.சுந்தராஜ் தலைமை தாங்குகிறார். கட்சியின் பொதுச் செயலாளர் பொறி.எஸ்.ஜெகதீசன், கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்புச் செயலாளர் எஸ்.யுவராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

சமூக நீதி சத்திரியர் பேரவை இணைப் பொதுச் செயலாளர் எஸ்.எம். குமார், தமிழ்நாடு விவசாயிகள் -தொழிலாளர்கள் கட்சி இளைஞரணிச் செயலாளர் வினோத் பொன்குமார், பொதுச் செயலாளர்கள் வி.சுப்பராயலு, ஜெகமுருகன், பொருளாளர் ஆர்.சேகர், துணைத் தலைவர்கள் பி.கே.மூர்த்தி, என். லட்சுமணன், ஜெ.எல். குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்த நிகழ்ச்சியை தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி, தமிழக கட்டடத் தொழிலாளர் மத்திய சங்கம், கட்டுமான மற்றும் மனைத் தொழிலில் கூட்டமைப்பு, சமூக நீதி சத்திரியர் பேரவை ஆகிய இயக்கங்கள் இணைந்து நடத்துகின்றன.

இந்த நிகழ்ச்சியில் அனைவரும் திராளாக கலந்து கொள்ளுமாறு கட்சியின் பொதுச் செயலாளர்கள் என்.சுந்தராஜ், பொறி.எஸ். ஜெகதீசன், வி.சுப்புராயலு, ஜெகமுருகன் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆம்பூர் தொகுதி - மாதனூர் - மிட்டாளம் ஊராட்சி -

# ஊட்டல் சரஸ்வதி கோயிலை சுற்றுலா தலமாக்க அரசு முன்வருமா?

## சட்டப் பேரவையில் அ.செ.வில்வநாதன் வினா!

சென்னை, ஜூன் 28-

சட்டப் பேரவையில் ஆம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கா.ராமச்சந்திரன் அளித்த பதிலும் வருமாறு:-

**அ.செ. வில்வநாதன்:** (அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், மிட்டாளம் ஊராட்சி, ஊட்டல் சரஸ்வதி கோயிலை சுற்றுலாத் தலமாக்கி அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் கா.ராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி, அரசாணை எண் 155, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 3.11.2021ல் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துகள், கட்டமைப்புகளில் முன்னேற்றம், முதலீடுகள் போன்றவை இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்க இயலாத திட்டங்கள் என்று அரசால் வரையறுக்கப்பட்டுள்ளன.

எனவே, ஊட்டல் சரஸ்வதி திருக்கோயில் என்பது தனியார் தேவஸ்தானத்தால் நிறைவேற்றப்பட்டு வரும் கோயில் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி காணை மத்திய ஒன்றியம் கல்யாணம் பூண்டி ஊராட்சியில் ஆத்தூர் ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தனர். அப்போது ராஜேந்திரன், அன்பரசு, கருணாநிதி, கந்தசாமி, சதீஷ்குமார் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.